# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
## Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com


**17 வயதுப்பிரிவு**
(01.01.2000 – 31.12.2001 வரையில் பிறந்தோர்)

# தமிழ் மொழியின் தொன்மை

காவியமும், ஓவியமும், காவிரியும், வைகையும், கட்டிடமும், சிற்பமும், கல்வெட்டுகளும், புதைபொருட்களும் தமிழரின் தொன்மையை வையகத்திற்குக் காட்டி நின்றாலும் தமிழ்மொழியின் காலத்தை எவரும் கணித்துக் கூறுவதற்கில்லை. இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்தது அகத்தியம் என்று கூறப்படுகின்றது. அதுவே தமிழில் தோன்றிய அத்தனை இலக்கண, இலக்கிய நூல்களுக்கும் வழிகாட்டி நின்றதெனில், அதற்கு முன்பே தமிழ்மொழி செழுமை பெற்றிருக்க வேண்டும் என்பதே மறுக்க முடியாத உண்மை.

வையகத்தில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றுள் ஒலி வடிவமும் வரிவடிவமும் கொண்ட மொழிகள் இரண்டாயிரத்து இருநூற்று அறுபத்தொன்று மட்டுமே. இவற்றுள்ளும் எட்டு மொழிகளே செம்மொழிச் சிறப்புப் பெறுகின்றன. அவ்வகையில் செம்மொழிகளுள் ஒன்றாக எங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழியும் விளங்குகின்றது என்பதில் நாம் பெருமை கொள்ள வேண்டும்.

‘வையக மொழிகளுள் மூத்த முதல் மொழி தமிழாகத்தான் இருக்க வேண்டும்’ என்று மொழியியல் அறிஞர் நோம் சொம்ஸ்கி அறிவித்துள்ளார். அக்கருத்தை அவருக்கு முன்னரே மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள் தன்னுடைய அயராத மொழியியல் ஆய்வின் மூலம் நிறுவியுள்ளார். தனக்கெனத் தனித்துவமான ஒலிவடிவும், வரிவடிவும் கொண்டு நேர்த்தியான இலக்கணக் கட்டமைப்புடனும் இடையறாத பேச்சுவழக்குடனும் வளர்ச்சி கண்ட தமிழ் மொழியின் தொன்மைக்கு இது போன்ற பல ஆய்வுகள் சான்று பகர்கின்றன.

தொன்மைத் தமிழ்மொழிக்கு உரிமை பூண்டு, சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த மூத்தகுடி அவ்வப்போது தன் மொழியின், தன் இனத்தின் பெருமைகளைப் பேணத் தவறியதே வேதனை. இதனால் தமிழின் தொன்மையைத் தங்கள் அறிவின் அளவுகோல் கொண்டு அளக்க முற்பட்டனர் மற்றையோர். அகமும் புறமுமாய் வாழ்வியலின் வகையையும் வழியையும் சொன்ன தமிழ்ச் சான்றோர் படைத்த செய்யுள்களுக்கு உரைதந்த பெரும்பான்மையோர் அதன் கருப்பொருளைத் திரிபுபடுத்தினர். மொழியால் ஒன்றுபட்டு நின்ற இனத்தை பிளவுபடுத்தினர். அதுவே தமிழர் வரலாறு என்று நிலைநிறுத்தினர்.

பல்லாயிரம் ஆண்டுகள் தொன்மை கொண்ட இனத்தின் வரலாற்றை வெறும் தொல்பொருள் ஆய்வு கொண்டு நிறுவ வேண்டியுள்ளதே எம் இனத்தின் சாபம். மனித இனத்திற்கே அறம், பொருள், இன்பம் என்னும் வையத்துள் வாழ்வாங்கு வாழும் வகை சொன்ன எங்கள் வள்ளுவனாரின் திருக்குறள் வையக மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சங்ககால நூல்களும் அதன் பின் தோன்றிய நூல்களும் கொண்டுள்ள செய்யுள் வகைகளை விதந்து பாராட்டுகின்றனர் மொழியியல் அறிஞர்கள்.

இத்தாலி நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்து தமிழின் தொன்மையை அதன் செழுமையை உணர்ந்து தெளிவுறக் கற்று “சதுரகராதி” என்னும் அகராதியையும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தையும் செய்து “வீரமாமுனிவர்” என்னும் தமிழ்ப்பெயர் சூட்டிக்கொண்டார் பெஸ்கிப் பாதிரியார். இவற்றையெல்லாம் அறிந்திருந்தும் எமக்கு இன்னும் மேல்நாட்டு மொழி, பண்பாடு, கலை என்பவற்றில் தீராத மோகம்! எமது மொழியை, கலையை, பண்பாட்டைப் பேணுவதில் ஏனோ தயக்கம்!

பன்மொழிப் புலமை கொண்ட எம்போன்ற இளையவர்கள் இப்போது சிந்திக்கத் தொடங்கியிருப்பது பெருந்திருப்பம். இதனை வளரவிட்டால் பார் ஆண்ட இனமொன்றின் வீரவரலாறும் மொழிவழி ஆளுமையும் மீள் எழுச்சி பெறும் என்று அஞ்சுகிறது அனைத்துலகம். அதனால் தான் நாம் எழும்போதெல்லாம் அடக்க முற்படுகிறார்கள். ஆண்ட தமிழினம் மீண்டும் ஆளும். அதுவே நியதி ஆகும்.

எனவே, தாய்மண் மீட்க, தாய்மொழி காக்க நாம் கொடுத்த விலைகளை மறவாதிருப்போம். அவர் தம் கனவுகளை விலை பேசாதிருப்போம். தொன்மைத் தமிழின் அழகோடும், அறிவோடும் நிமிர்வோம்.

நன்றி,
வணக்கம்.